1978 மார்ச் 31]

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் பாட்சா, துணைப் பொதுச் செயலாளர் ப.உ.ச. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

வட்டக்கழக — பகுதிக் கழகச் செயலாளர்கள் — நிர்வாகிகள் துணை-சார்பு மன்ற நிர்வாகிகள்—மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற (பேரவை-மேலவை) உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்றுச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன். ஆர்.டி.சீதாபதி, செயலாளர், சென்னை மாவட்ட தி.மு.க.'' என்று இப்படிப் பட்ட அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. சட்டமன்ற கட்சி அலுவல கத்தில் கூட்டத்தைக் கூட்டுவது சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரா அல்லது செயலாளரா இல்லை, மாவட்டச் செயலாளரா? சட்ட மன்றக் கட்சி அலுவலகம், அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப் பினர்கள் கூடுவதற்கா அல்லது அரசியல் கட்சி செயல்வீரர்கள் கூடுவதற்கா ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமருங்கள். புரிந்து கொண்டேன். நம்முடைய விதிகளிலே தெளிவாக அவைகளை எடுத்துக் காட்டவில்லை. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கட்சியினுடைய கூட்டத்தைக் கூட்டலாமா வேண்டாமா என் பதற்கு விதிகள் தெளிவாக இல்லை. இரண்டாவது, கட்சியின் தலைவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாக் கட்சிகளிலும் நடைபெறு கின்றன. ஆகவே, அதைப்பற்றி விதிகளை தெளிவாக ஏற்படுத்தித் தருவார்களானால் பிறகு, அதைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறேன்.

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள் அரசால் அளிக்கப்பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழக அரசு அறிவித்த அறிவிப்பிலே சட்டமன்ற உறுப் பினர்கள் தங்கள் துணைவியருடன், பெண்ணாக இருந்தால் தங்கள் துணைவருடன் 5,000 கிலோ மீட்டர் ரெயிலிலே பயணம் செய்ய அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் திருமணம் ஆகாத உறுப்பினர்கள் நாஞ்சில் வின்சென்ட், சின்னசேலம் சுப்பிரமணியம் போன்றவர்கள் அந்த 5,000 கிலோ மீட்டர்களை எப்படிப் பயன்படுத்துவது, என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திரு. மி. வின்சென்ட்: நான் இன்னும் 2 மாதங்களில் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட வினக்களை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் 11-ஆம் தேதி இந்த அவையில் ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: 11-ஆம் தேதி ஒத்திவைக்கப் பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் என்னுடைய தொகுதியைப் பற்றிய கேள்விகள், அமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது இந்தக் கூட்டத் தொடரும் முடிய இருக்கிற காரணத்தினால் இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அதற்கு விடையளிக்க தாங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர்கள் வந்த உடன் கேட்டுப் பதில் சொல்லுகிறேன்.

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர் களுக்குத் தரப்பட்ட சாப்பாட்டுத் தட்டுகள் பற்றி எழுப்பப் பட்ட பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் போது மேலதிகாரிகள் அப்பள்ளி ஆசிரியர்களை அச்சுறுத்துவதாக கூறப்படுவது குறித்து.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றத்தில் திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்குச் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கியிருப் பதையும், அதில் எம். ஜி. ஆர். லதா என்று பெயர்கள் பொறிக்கப்பட்டு இருப்பதையும் குறிப்பிட்டு இங்கே தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எதற்காக என்ற விவரத்திற்கு வாருங்கள்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: அந்த சம்பவத்தின் விளைவாக நேற்று மாவட்டத்தின் பெரிய அதிகாரிகள் அந்த திருத்துறைப் பூண்டி ஆசிரியர்களை அழைத்து இந்த மாதிரி தட்டுகள் அங்கே வழங்கப்படவில்லை, அந்தத் தட்டுகளைத் திரும்பத்தாருங்கள்